


# 19.09.2026 செய்திகள்

## அடையாளம் இழந்தது திரிணமூல் காங்கிரஸ்

- திரிணமூல் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்ட நிலையில், மம்தா பானர்ஜி தலைமையிலான அணிக்கும், அருப்ராய் தலைமையிலான அதிருப்தி அணிக்கும் புதிய பெயர்கள் மற்றும் சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால் திரிணமூல் காங்கிரஸ் கட்சி தனது 28 ஆண்டு கால அடையாளத்தை இழந்துள்ளது.
- காங்கிரஸில் இருந்து பிரிந்து 1998-இல் திரிணமூல் காங்கிரஸை நிறுவிய மம்தா பானர்ஜிக்கு தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது.

» கட்சிப்பெயர், சின்னத்தைப் பயன்படுத்த தடை

- இந்த சூழலில் 1968-ம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு) உத்தரவின் 15-ஆவது பத்தியின் கீழ் விசாரணை நடைமுறைகளை நிறைவு செய்ய போதிய கால அவகாசம் இல்லை என சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணையம், இடைத்தேர்தலுக்கான அவசர தேவையைக் கருத்தில் கொண்டு திரிணமூல் காங்கிரஸின் பெயர், சின்னத்தை இரு அணியினரும் பயன்படுத்த தடை விதித்து உத்தரவிட்டது.

» 28 ஆண்டுகால அடையாளம்

- 1998-இல் காங்கிரஸில் இருந்து பிரிந்து திரிணமூல் காங்கிரஸை நிறுவிய மம்தா, தான் கைப்பட வரைந்த புற்களுடன் கூடிய இரு மலர்கள் சின்னத்தை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பித்து, அதற்கு அங்கீகாரம் பெற்றார்.
- திரிணமூல் காங்கிரஸின் 28 ஆண்டு கால வரலாற்றில் கட்சியின் அடையாளமாக இந்தச் சின்னம் விளங்கியது.

SURESH'